**SET-4**

**Series AQ@QA/C**

**Q.P. Code 10**

Roll No. | | | | | | | | |

Candidates must write the Q.P. Code on the title page of the answer-book.

- இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற **5** பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்.
- வினாத்தாளின் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Code No.) விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்.
- இந்த வினாத்தாளில் **24** வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.
- **எழுதத் தொடங்குவதற்கும் முன் விடைத்தாளில் வினாவின் வரிசை எண்ணைக் குறிப்பிடவும்.**
- வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும். 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.
- Please check that this question paper contains **5** printed pages.
- Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **24** questions.
- **Please write down the serial number of the question in the answer-book before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# தமிழ்

# TAMIL

*கால அளவு : 2 மணி* | *மொ. மதிப்பெண்கள் : 40*

*Time allowed : 2 hours* | *Maximum Marks : 40*

**I.** பின்வரும் இலக்கண வினாக்களில் எவையேனும் **நான்கனுக்குக்** குறுகிய விடை எழுதுக : *4×2=8*

1. திணை எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

2. இடத்தின் வகைகளைக் கூறுக.

3. குறிப்பு விடைகள் என வழங்கப்படுபவை எவை ?

4. பொருள்கோள் என்றால் என்ன ?

5. இனமொழியைச் சான்றுடன் விவரி ?

6. அன்பின் ஐந்திணைகள் என அழைக்கப்படுபவை எவை ?

7. முதற் பொருளாவது யாது ?

**II.** பின்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் சுருக்கமான விடை எழுதுக : *3×3=9*

8. குலசேகர ஆழ்வார் - குறிப்பு வரைக.

9. சங்க இலக்கிய நூல்கள் மூலம் நீவிர் அறிந்து கொள்ளும் செய்தி யாது ?

10. “சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள்” – இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

11. சரயு ஆறு எவ்விடங்களிலெல்லாம் பரவிப் பாய்ந்ததாக கம்பர் குறிப்பிட்டுள்ளார் ?

12. யாரால் பகைவரின் வலிமையை எதிர்கொள்ள முடியாது ?

**III.** பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் **இரண்டனுக்குக்** குறுகிய விடை எழுதுக : *2×2=4*

**13.** 'வாட்சன்' – குறிப்பு வரைக.

**14.** மொழிபெயர்ப்புப்பற்றிக் கூறிய இலக்கண நூல் எது ?

**15.** தமிழகத்தில் கரகாட்டம் நிகழ்த்தப் படும் மாவட்டங்கள் யாவை ?

**16.** புலியாட்டம் என்றால் என்ன ?

**IV.** பின்வரும் உரைநடை வினாக்களில் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் விரிவான விடை எழுதுக : *1×5=5*

**17.** இடம்பார்த்து மொழிபெயர்க்க வேண்டும் என்பதைச் சான்றுடன் விவரி.

**18.** கூத்துப்பட்டறை ந. முத்துசாமி குறித்து நீவிர் அறிந்தனவற்றை தொகுத்து எழுதுக.

**V.** பின்வரும் துணைப்பாடப் பொருண்மைகளுள் **ஒன்று** குறித்து விரிவாக எழுதுக : *1×5=5*

**19.** தன்னம்பிக்கை மனிதர் ஸ்டீபன் ஹாக்கிங்.

**20.** பாய்ச்சல் - கதையைச் சுருக்கி வரைக.

**21.** புதிய நம்பிக்கையை விதைத்திடும் நம்பிக்கை.

VI.

**22.** பின்வரும் உரைநடைப் பகுதியை **மூன்றில் ஒரு பங்காகச்** சுருக்கி வரைக : *1×4=4*

சிக்கனமாய் வாழ்வதற்கு என்ன செய்ய வேண்டும். செலவுகளைக் குறைத்தல் வேண்டும். அப்படியானால் நல்ல உணவு, சிறந்த ஆடை மற்றும் தேவையான பொருள்களுக்குப் போதிய அளவு செலவு செய்யாமல் வாழ்வதா ? தனக்கும் தன் குடும்பத்திற்கும் தேவையான, இன்றியமையாத செலவுகளைச் செய்யத்தான் வேண்டும். தேவைக்குச் செலவிட்டது போக எஞ்சிய வருவாயில் எதிர்கால வாழ்க்கைக்குச் சேர்த்து வைக்கும் பழக்கத்தை மேற்கொள்ளல் வேண்டும்.

எறும்பும் மழைக்காலத்தில் தனக்கு வேண்டிய உணவைக் கோடைக்காலத்திலேயே தேடிவைத்துக் கொள்கிறது அன்றோ ? அதுபோல தாமும் உழைக்கவும் ஊதியம் மிகுதியாகத் தேடவும் வாய்ப்பும் வலிமையும் இருக்கும்போதே சேர்த்து வைக்க முயலுதல் வேண்டும். எதிர்காலப் பாதுகாப்பு மிக்க வாழ்க்கையின் பொருட்டாவது சிக்கனமாக வாழும் பயிற்சியை மேற்கொள்ளுதல் வேண்டும். சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல், சிறுகச்சிறுகச் சேமித்தாலே பெரும் பொருள் சேமித்து விடலாம். சிக்கனமாக வாழ்வோம். சிறப்புடன் வாழ்வோம்.

**VII.** பின்வரும் பொருள்களில் **ஒன்று** பற்றி கடிதம் எழுதுக : *1×5=5*

**23.** நீவிர் கண்டு களித்த இடம் குறித்து உன் நண்பனுக்கு கடிதம் ஒன்று வரைக.

**(அல்லது)**

**24.** உங்கள் பகுதியில் குடிநீர் வசதி வேண்டி மாநகராட்சி ஆணையருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக.

(இரு கடிதங்களிலும் உன் முகவரி அ. கர்ணன் / அ. கண்ணகி, 265, காந்தி நகர், அண்ணாநகர், சென்னை-40 எனக் கொள்க)